**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.89/2019**

| | | |
|---|---|---|
| **NAME** | : | சொக்கலிங்கம் |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 17.03.2023.**

குறுக்கு விசாரணை

நான் பாராஸ்ட் ரேஞ்சராக இருந்து 2012 மே மாதம் பணி ஓய்வு பெற்றுள்ளேன். பிரதிவாதி எங்கள் கிராமத்தைச் சேர்ந்தவர். அவர் மரம் டிப்போ வைத்து நடத்துகிறார். பிரதிவாதி குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் பழக்கம் உண்டு. 40-50 ஆண்டுகளுக்கு மேலாக குடும்பப் பழக்கம் உண்டு. பல ஆண்டுகளுக்கு முன்னால் வெல்லமண்டி வைத்திருந்தார்கள். வருடம் ஞாபகம் இல்லை. மரம் டிப்போ 25-30 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்கள். பிரதிவாதி இம்போர்ட்டட் மரம் வாங்குவார், அதற்கு பணம் கட்டவேண்டும் என்று என்னிடம் கேட்டார். வழக்கில் சொல்லப்பட்ட லாவாதேவிக்கு முன்னால் கடந்த 10-வருடமாக அவ்வப்போது பணம் வாங்குவார், திரும்ப கொடுத்துவிடுவார். லோடு வந்தால் ரூ.40,000/- வாங்குவார். மரம் வாங்கச் செல்லும்போது ரூ.5 லட்சம் அல்லது ரூ.4 லட்சம் வாங்குவார், திரும்ப கொடுத்துவிடுவார். நான் 26 வருடம் பாரஸ்ட்டராக இருந்தேன். அதன் பிறகு மூன்றரை வருடம் ரேஞ்சராக இருந்தேன். நான் வருமானவரி செலுத்துபவர்தான். 2013 லிருந்து நான் வருமானவரி செலுத்தி வருகிறேன். நான் வருமானவரி செலுத்துவதற்கான ஆவணம் தற்போது என்னிடம் இல்லை. எனது ஆடிட்டர் பெயர் ரவி. அவர் மூலமாகத்தான் வருமானவரி செலுத்துகிறேன். அவரிடம் நகல் இருக்குமா என்று எனக்கு தெரியாது, கேட்டால்தான் தெரியும். தற்போது 2 வருடமாக உள்ள வருமானவரி செலுத்தியதற்கான ரசீது மட்டும்தான் என்னிடம் உள்ளது. பிரதிவாதிக்கு எதிராக நான் ஒரு வழக்கு போட்டுள்ளேன். என் மனைவி ஒரு வழக்கு போட்டுள்ளார், என் மகன் ஒரு வழக்கு போட்டுள்ளார் என்றால் சரி. 3 பேருமே தனித்தனியாக வருமானவரி செலுத்துகிறோம். என் மனைவி இல்லத்தரசி. நான், என் மனைவி, மகன் ஒரே வீட்டில்தான் இருக்கிறோம். எனக்கு இரண்டு ஆண், இரண்டு பெண். என் ஒரு மகன் விஐடிக்கு எதிரில் மேன்ஷன் வைத்து நிர்வாகம் செய்தவர் தற்போது சென்னையில் வேலை பார்க்கிறார். மற்றொரு மகன் தற்போது அந்த மேன்ஷனை நிர்வாகம் செய்கிறார். பெரிய மகள் திருமணமாகி திருவள்ளூரில் வசிக்கிறார். மற்றொரு மகள் இன்போசிசில் வேலை பார்க்கிறார். ஒரு மகனுக்கும், ஒரு மகளுக்கும் திருமணம் ஆகவில்லை. அசையா சொத்துக்கள் என் பெயரில் உள்ளது. என்னுடைய சொந்த ஊர் கல்லப்பாடி. எனக்கு 8 ஏக்கர் நிலம் உள்ளது. மனைவி, மகள் பெயரிலும் தனியாக சொத்து உள்ளது. நான் பாராஸ்ட் ரேஞ்சராவதற்கு முன்பே பிரதிவாதி எனக்கு பழக்கம். பிரதிவாதியின் தம்பி ஐயப்பனுக்கும் நான் கடன் கொடுத்துள்ளேன். இரண்டு பேருமே மர வியாபாரம் பார்த்து வந்தார்கள். தற்போது

தனித்தனியாக வியாபாரம் செய்கிறார்கள். 2018 வரை இரண்டு பேரும் ஒன்றாக வியாபாரம் செய்தார்கள். பிரதிவாதிக்கு அசையா சொத்துக்கள் உண்டு. வியாபாரம் மூலமாக வருமானம் உண்டு. பிரதிவாதிக்கு ஆண்டு வருமானம் சுமார் 10 கோடிக்கு வரும். மாதம் ரூ.75,000–லிருந்து ரூ.90,000–ம் சம்பாதிப்பார். அவரும் 30 வருடமாக வருமான வரி செலுத்துகிறார். 11.04.2018ல் பணம் ரூ.5 லட்சம் கொடுத்தேன். அடுத்த கடன் 19.04.2018ல் கொடுத்தேன். அவர் முதலில் ரூ.5 லட்சம் கேட்டார். என்னிடம் 10ம் தேதி கேட்டார். 11ம் தேதி கொடுத்தேன். மரம் வாங்குவதற்காக கேட்டார். ரூ.5 லட்சம் பணமாகத்தான் கொடுத்தேன். இரண்டாவதாக ரூ.5 லட்சமும் மரம் வாங்கத்தான் கேட்டார். ஏப்ரல் மாதம் தொடங்கி ஜீலை 2018 வரை ரூ.25 லட்சம் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். ஏப்ரல் மாதம் தொடங்கி மே மாதம் வரை கொடுத்துள்ளேன். அந்த தொகையை வீட்டில்தான் வைத்திருந்தேன். நான் பணமாகத்தான் வைத்திருப்பேன். வங்கியில் வைக்க மாட்டேன். முதலில் உள்ள கடன் தொகையை பைசல் செய்தபிறகுதான் இரண்டாவது தொகையை கொடுப்பேன் என சொல்லவில்லையா என்றால் சொல்லவில்லை, ஏனென்றால் அவர் வாங்கி திரும்ப கொடுத்துவிடுவார். நான் பாண்டு எழுதி வாங்கியுள்ளேன். பாண்டு தவிர்த்து நான் வேறு எந்த தொகையையும் வாங்கவில்லை. மாதம் ரூ.100க்கு 2 ரூபாய் வட்டி தரணும். ரூ.25 லட்சத்திற்கு எவ்வளவு வட்டி கொடுத்தார் என்றால் வட்டியே கொடுக்கவில்லை. முதல் பாண்டு எழுதியதிலிருந்து வழக்கு போடும்வரை அவர் எந்த வட்டியும் கொடுக்கவில்லை. வட்டியும், அசலும் தரவில்லை என்று நோட்டீஸ் கொடுத்தேனா என்றால் நான் நேரில் கேட்டேன். பிறகு நோட்டீஸ் கொடுத்தேன். நேரில் பலமுறை போய் கேட்டேன். தேதி ஞாபகம் இல்லை. போனிலும் கேட்பேன். கடைசியாக நோட்டீஸ் கொடுப்பதற்கு நான்கைந்து நாட்கள் முன்னால் நேரில் போய் கேட்டேன். என் நிலத்திலிருந்து வரும் வருமானம், தோப்பிலிருந்து வருமானம், ஓய்வூதிய பென்ஷன் மற்றும் தெரிந்த நபர்களிடம் இருந்து வாங்கி கொடுத்தேன். நிலத்திலிருந்து ஆண்டு வருமானம் 2 முதல் 3 லட்சம் வரும். 2018ல் பென்ஷன் மாதம் ரூ.20,000ம் வரும். மேன்ஷனிலிருந்து மாதம் ரூ.25,000ம் வரும். (வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.